1970 ஆகஸ்ட் 26]

[உறுப்பினர்கள் அனைவரும் ஒரு நிமிட நேரம் மவுனமாக எழுந்து நிற்க, மாண்புமிகு அவை முன்னவர் அவர்களால் முன் மொழியப்பட்ட இரங்கல் தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப் பட்டது.]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மறைந்த பெரியவருக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் பேரவை இப்போது ஒத்தி வைக்கப்பட்டு மீண்டும் இன்று காலை 10 மணி அளவில் கூடும்.

[பின்னர் பேரவை ஒத்தி வைக்கப்பட்டது.]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் (திரு. ஜி. ஆர் எட் மண்ட்) அவர்கள் தலைமையில் பேரவை மீண்டும் காலை 10 மணிக்குக் கூடியது.

(2) வினாக்கள்—விடைகள்.

வெள்ளிக் குறியிட்ட வினாக்கள்.

Illicit liquor trafficking in Mylapore area

31 * *Q.*—THIRU T. MARTIN : Will the Hon. the Chief Minister be pleased to state :—

(*a*) whether women of other States are engaged in trafficking in illicit liquor in areas like Raja Annamalaipuram, Abiramapuram and Mylapore;

(*b*) whether any case under Madras Prohibition Act was registered against a woman belonging to other State in C. I. T. Nagar, Mylapore in the last week of January 1970 by Tamil Nadu Police; and

(*c*) if so, the particulars thereof?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: (அ) இல்லை.

(இ) ஆம்.

(உ) கார்த்திகாயினி அம்மாள் என்பவரின் மகளும், கேரள மாநிலத்தைச் சேர்ந்தவருமான 28 வயதான சரசா என்பவள், மயிலை, சி.ஐ.டி. நகரில் உள்ள பிஷப் வாலர் அவென்யூவில் 7/எ எண் வீட்டில் ரூ. 240 மதிப்புள்ள நான்கு பிளாக் நைட் விஸ்கி புட்டி களுடன் தமிழ்நாடு மது விலக்குச் சட்டத்தின் 4 (1) (அ) பிரிவின் கீழ் 31—1—1970 அன்று குற்றப்புலனாய்வுத்துறையைச் சேர்ந்த மதுவிலக்குப் புலனாய்வுக் கழகத்தின் காவல் துறை இன்ஸ்பெக் டரால் கைது செய்யப்பட்டார். சைதாப்பேட்டை மாநகர 6-வது மாஜிஸ்ட்ரேட்டினால் 5—2—1970 அன்று சி.சி. 2851/70-ம் எண் வழக்கில் அவளுக்கு ரூ. 150 அபராதமும் அல்லது அந்த அபராதத் தைச் செலுத்தத் தவறினால் ஆறு வாரம் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது. அபராதம் செலுத்தப்பட்டது.

Thiru T. Martin: Mr. Deputy Speaker, Sir, every day we find in the newspapers that the Customs Department belonging to Central Government are unearthing heavy smuggling cases involving goods and contrabands of high value. But at the same time our Police are not showing so much interest in deteching cases like this. May I request the Hon. Chief Minister to state whether the Government are aware of the fact that cars belonging to other States especially Kerala and Mysore are paying periodical visits to the Mylapore area within the jurisdiction of Mylapore Police and whether this has been brought to the notice of the Police Commissioner and if so, whether any action has been taken in this regard?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல் மற்ற மாநிலங்களிலிருந்து அப்படி ஏராளமானவர்கள் அந்தப் பகுதியில் குடியேறி இந்தக் காரியங்களைச் செய்வதாக எந்தத் தகவலும் வரவில்லை. இந்தக் கேள்வி-பதில், அதன் விளைவுகளையொட்டி போலீசார் அக்கறையோடும், தீவிரமாகவும் இதிலே கவனம் செலுத்துவார்கள் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

திரு. பெ. மலைச்சாமி: தலைவரவர்களே, தமிழகத்தில் மது விலக்கை தீவிரப்படுத்த, மத்திய அரசிடம் இந்த அரசு உதவித் தொகை ஏதாவது கேட்டதா? ஆமெனில், அதற்கு மத்திய அரசு என்ன பதில் தந்துள்ளது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: அதைக் கேட்டதும் உறுப்பினருக்குத் தெரியும், அவர்கள் இல்லையென்று மறுத்ததும் உறுப்பினருக்குத் தெரியும்.

Thiru T. Martin: Sir, with regard to investigation and also conduct of cases booked under the Prohibition Act, the City Police is not as efficient as it was accustomed to be in the previous days. Therefore, may I request the Hon. Chief Minister to state whether any proposal is pending before this Government to appoint a Special Officer with criminal intelligence experience to advise the City Police regarding detection, investigation and conduct of cases booked under the Prohibition Act?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்வதைப்போன்று அல்லாமல் மொத்தத்தில் போலீசார் திறமையுடன்தான் இப்படிப்பட்ட வழக்குகளில் நடந்து கொள்கிறார்கள். இப்படிப்பட்ட குற்றங்களைப் பிடித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர் சொன்னதைப்போல், அவர்களுக்கு மேலும் கவனத்தை ஊட்டத் தக்க அளவிற்கு அறிவுரை கூறுவதற்கு இப்படிப்பட்ட அதிகாரிகள் தேவைதானா, இப்படிப்பட்ட குழுக்கள் தேவைதானா என்பதை அரசு இனிமேல்தான் யோசிக்க வேண்டும்.